**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**
KRISHNAGIRI

**Session Case No. 268 of 2022**

Prosecution witness LW7 (PW5) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 09.09.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.நஞ்சுண்டசாமி | Father Name | : | திரு.நஞ்சப்பா |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஓசூர் சனாசந்திரம் வி .ஓ.சி நகரில் குடியிருக்கிறேன். Ashok Layland Unit-2 ல் காண்ட்ராக்ட் வேலை செய்து வருகிறேன் . என் வீட்டிற்கு இடது கை பக்கம் சந்தோஷ் என்பவரின் வீடு இருக்கிறது . ஆஜரில் இருக்கும் நபர் தான் சந்தோஷ் ஆவார் . சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் என் குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச்சென்று அவர்களை பள்ளியில் விட்டுவிட்டு என் பாட்டியை பார்ப்பதற்காக அகொண்டபள்ளி அடுத்த சூளகொண்டாபள்ளிக்கு போய்விட்டு நான் திரும்பி வந்தபோது கொலை நடந்திருந்தது. யாரப் என்பவர் இறந்துவிட்டார். நான் அந்த இடத்திற்கு மாலை 3.00 மணிக்கு வந்திருந்தேன். நான் வந்தபோது இறந்துபோன் உடல் அந்த இடத்தில் இல்லை . கொலை எந்த வீட்டின் அருகே நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

போலீஸ் விசாரணையின்போது கடந்த 01.04.2022 தேதி மதியம் 12.30 மணியளவில் நைட் ஷிப்ட் என்பதால் வீட்டில் இருந்தபோது மதியம் 12.30 மணி அளவில் யாரப் என்பவரும் , குல்லா என்பவரும் கையில் மது பாட்டுலுடன் குல்லா வீட்டிற்குள் சென்றார் என்றும் சிறிது நேரதில் அவர்கள் வீட்டில் இருந்து சத்தம் கேட்டது என்றும் , நான் வெளியே வந்து பார்த்தபோது குல்லா எ சந்தோஷ் அவர் வீட்டில் இருந்து கையில் இரத்துடன் உள்ள இரும்பு பம்பர்ருடன் அவர் வீட்டிற்கு கிழக்கு பக்கமாக நடந்துபோய் கொண்டிருந்தார் என்றும் , யாரப் தலை , முகம் ஆகிய இடங்களில் இரத்த காய்த்துடன் இறந்து கிடந்ததை நான் பார்த்தேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் சம்பவத்திற்கு முன்பாகவும் எதிரியை பார்க்கவில்லை என்றும், சம்பவத்திற்கு பின்பும் எதிரியை பார்க்கவில்லை என்று எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் அது தவறு.

VASUDEVAN DAMODARAN

Additional District Judge
Digitally signed by VASUDEVAN DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 268 of 2022**

Prosecution witness LW6 (PW4) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 09.09.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி. அஸ்மா | Husband's Name | : | திரு.உசேன் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஒசூரில் சனசத்திரம் என்ற இடத்தில் வசிக்கிறேன் . எங்கள் வீட்டிற்கு நான்கு கடை தள்ளி மளிகை கடை வைத்துள்ளேன் . என் அக்கா பெயர் சல்மா அவர் கணவர் பெயர் யாரப் . யாரப் கூலி வேலை செய்து வந்தார் . 2022 வருடம் , 4 ஆம் மாதம், 1 ம் தேதி மதியம் 2.30 மணிக்கு அஸ்வினி உடைய அம்மா ஜெயந்தி அவர் வீட்டின் அருகே கூட்டமாக இருந்தது . நானும் என் தம்பி ஹிளியாஷம் போய் பார்த்தோம் . என் அக்கா வீட்டுக்காரர் அந்த இடத்தில் விழுந்து கிடந்தார். அவர் முகம் எல்லாம் இரத்தம் இருந்தது . என் மாமாவை யார் அடித்தார்கள் என்ற விவரம் தெரியாது . அதன்பிறகு என் அக்காவிற்கு போன் செய்து இந்த விவரத்தை சொன்னோம் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.</u>

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசாரணையின்போது கடந்த 01.04.2022 தேதி மதியம் 12.30 மணியளவில் அஸ்வின் உடைய தம்பி குல்லா (எ) சந்தோஷ் வீட்டில் சண்டை போடும் சத்தம் கேட்டு நானும் என் தம்பி ஹிளியாசும் மற்ற சிலரும் போய் பார்த்தபோது , என் மாமா யாரப் தலையை பிடித்துக்கொண்டு வீட்டில் இருந்து வெளியே வந்தார் என்றும் , அவரை பின்தொடர்ந்து வந்த குல்லா (எ) சந்தோஷ் என் மாமாவை இரும்பு பம்பரால் தலைமீது சரமாறியாக அடித்ததில் என் மாமா கீழே விழுந்து விட்டார் என்றும் , அப்பொழுது குல்லா அஸ்வினி கொலைக்கு நீயும் உடந்தையாடா என்று சொல்லி ஒரு கடப்பா கல்லை எடுத்து என் மாமா தலைமீது போட்டுவிட்டார் என்றும் என் மாமா பலத்த இரத்த காயந்துடன் இறந்துவிட்டார் என்றும் , குல்லா (எ) சந்தோஷ் இரும்பு பம்பரை எடுத்துக்கொண்டு அந்த இடத்தில் இருந்து சென்றுவிட்டார் என்றும், சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் அது தவறு.

Additional District Judge
VASUDEVAN DAMODARAN
Digitally signed by VASUDEVAN DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 268 of 2022**

Prosecution witness LW4 (PW3) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 09.09.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.ஜபிவுல்லா | Father Name | : | திரு.சையத் ரகீம் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது காலேகுண்டா , பார்வதி நகர், ஒசூர் என்ற விலாசதில் வசிக்கிறேன் , ஒசூர் எம் .ஜி.ஆர் மார்க்கெடில் காய்க்கறி கடை வைத்துள்ளேன். எனக்கு மூன்று குழந்தைகள். யாரப் எனக்கு மாமா முறை , அவர் என் அக்காவின் கணவன் ஆவார். யாரப் கிடைத்த வேலையை செய்து வந்தார். கௌவுஸ்கான் என்பவரை தெரியாது. 2022 என்று நினைக்கிறேன், 4 ஆவது மாதம் ஒரு வெள்ளிக்கிழமை , நான் நமாஸ் போவதற்காக ரெடியாகிக்கொண்டு இருந்தேன் . அப்போது மணி பகல் 12.30-1.00 மணி இருக்கும். எனக்கு போன் வந்தது . என் மாமா யாரபை அடித்து போட்டுவிட்டதாக யாரபின் மனைவி சல்மா எனக்கு போன் செய்து தெரிவித்தார், யார் என் மாமாவை அடித்தார்கள் . என்ற விவரத்தை சல்மா போனில் சொல்லவில்லை. என்னை ஜனசத்திரம் வரச்சொன்னார்கள், நான் 12.30-1.00 மணிக்குள் அந்த இடத்திற்கு போனேன், அங்கு போலீசார் எல்லாம் வந்திருந்தார்கள் யாரப் அடிப்பட்டு இறந்து கிடந்தார். இது சம்பந்தமாக யாரபின்

மனைவி சல்மா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் . மறுநாள் அந்த பாடியின் மீது போஸ்மார்டம் செய்தார்கள். போலீசார் என்னை புகார் கொடுத்த அன்றைய தினமே விசாரித்தார்கள். ஏதற்காக என் மாமா கொலை செய்யப்பட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசாரணையின்போது கடந்த 01.04.2022 தேதி மதியம் 12.30 மணியளவில் அஸ்வின் உடைய தம்பி குல்லா (எ) சந்தோஷ் என் மாமா யாரபை அவர் வீட்டில் இருந்து வெளியே வந்தபோது இரும்பு பம்பரால் தலைமீது சரமாறியாக அடித்ததால் அவருக்கு தலையில் பழுத்த காயம் ஏற்பட்டு சுருண்டு விழுந்துவிட்டார் என்றும் , அவர் தலைமீது ஒரு கடப்பா கல்லை தூக்கிப்போட்டு கொலை செய்ததாக எனக்கு ஹீனியாஷ் மற்றும் அஸ்மா சொல்லி தனக்கு தகவல் கிடைத்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது யார் கொலை செய்தார்கள் என்ற விவரம் தெரியாது என்றும், ஏதற்காக கொலை செய்தார்கள் என்ற விவரம் தெரியாது என்று எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்லிகிறேன் என்றால் அது தவறு

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் போவதற்கு முன்பாகவே போலீசார் ஜனசத்திரம் என்ற இடத்தில் இருந்தார்கள். அப்போது மணி 12.30-1.00 மணிக்குள் இருக்கும் என்றால்

சரிதான். என்னை ஓசூர் டவுன் காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரித்தார்கள்.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN